பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 04 2024 **MONDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் இந்தியாவை வலுவான நாடாக மாற்றுவதற்கு பிஜேபி உறுதிபூண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அரசு அமைந்தால், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் உள்மாவட்டங்களில் அடுத்த 4 நாட்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில், இந்தியா 5 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் உள்ளிட்ட 8 பதக்கங்களை இதுவரை வென்றுள்ளது..

**>>>><<<<**

மக்களவைக்கு மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

கட்சித் தலைவர்கள் பொதுக்கூட்டம், ஊர்வலம் என பல்வேறு வகையில் வாக்காளர்களை சந்தித்து தங்களது வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, நேற்று கர்நாடகாவில், **Sirsi, Davangere, Ballary** மற்றும் **Belagavi** உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் இந்தியாவை வலுவான நாடாக மாற்றுவதற்கு பிஜேபி உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் விவசாயிகள் உற்பத்தி அமைப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்ததன் மூலம், சிறு விவசாயிகளுக்கு தமது அரசு பெருமளவில் உதவி செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசு ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 11 ஆயிரம் கோடி ரூபாயை வேறு பணிகளுக்கு பயன்படுத்தியுள்ளது என்றும் அவர் குறை கூறினார்.

முந்தைய பிஜேபி ஆட்சியில், அம்மாநிலத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த 4 ஆயிரம் ரூபாய் நிவாரணத் திட்டத்தை, தற்போதைய அரசு ரத்து செய்துவிட்டது என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 மக்களவைத் தொகுதியில் ஏற்கனவே 14 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு முடிந்துள்ள நிலையில், மீதமுள்ள 14 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, ஒடிசாவில் கேந்திரப்பாரா மக்களவைத் தொகுதிக்குட்பட்ட **Salipur**-ல் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அரசு அமைந்தால், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், தமது கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து, உத்தரபிரதேச மாநிலம், சாம்பல் மற்றும் **Bareily** உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

மக்களவை தேர்தலில் பிஜேபிக்கான வெற்றி வாய்ப்பு குறைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஆகாஷ் ஆனந்த், சீத்தாபூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

உத்தரபிரதேசத்தில் பிஜேபி தலைமையிலான ஆட்சியில், ஷெட்யூல்டு வகுப்பு மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று திரு. ஆகாஷ் ஆனந்த் குற்றம் சாட்டினார்.

மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள அஸ்ஸாம், பீகார், சத்திஷ்கர், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களிலும் ஜம்மு காஷ்மீர் மற்றும் தத்ரா நாகர் ஹாவேலி, டையூ டாமன் ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில், 6வது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

தில்லியில் ஏழு மக்களவை தொகுதிகளிலும், ஹரியானாவில் 10 தொகுதிகளிலும், உத்தரபிரதேசத்தில் 14, பீகார் மற்றும் மேற்குவங்கத்தில் தலா 8, ஒடிசாவில் 6, ஜார்க்கண்டில் 4 தொகுதிகளில் அடுத்த மாதம் 25ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் 6ஆம் தேதி கடைசி நாளாகும்.

>>>><<<<

மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் இந்தியா உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக மாறுவது தவிர்க்க முடியாதது என்று முன்னாள் நிதியமைச்சர் திரு. ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், அடுத்தது யார் பிரதமராக பொறுப்பேற்றாலும், இந்தியப் பொருளாதாரம் அடுத்தகட்டத்தை நோக்கிச் செல்வது உறுதி என்று கூறினார்.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட மிகப் பெரிய சந்தையாக இந்தியா திகழ்வதால், உற்பத்தி துறையில் வலுவான நாடாக இந்தியா மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியை வைத்து, மக்களின் வளர்ச்சியை அளவிட முடியாது என்றும், தனிநபர் வருமானம் தான் வளர்ச்சிக்கான துல்லியமான அளவீடு என்றும் திரு. சிதம்பரம் குறிப்பிட்டார்.

>>>><<<<

அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் மிளகு கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர்,

மலைசார்ந்த இடங்களில் மட்டுமே விளையும் பயிர் என்று அறியப்பட்ட மிளகு சமவெளிப் பகுதியிலும் நன்கு விளையத் தொடங்கியுள்ளதால், மாநில அரசு மிளகு கன்றுகள் வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கூறினார்.

2018ஆம் ஆண்டு கஜா புயலுக்குப் பின்னர், புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நிலங்களை அப்பகுதி விவசாயிகள் மரம் சார்ந்த விவசாயத்தின் மூலம், மீட்டெடுத்து, கடந்த 6 ஆண்டுகளில் பசுமைப் பரப்பை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அடுத்த 4 நாட்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

குறிப்பாக, சேலம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் இயல்பை விட வெப்பம் அதிகமாக காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

கத்திரி வெயில் தொடங்க இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெயில் 110 டிகிரியை எட்டும் அளவிற்கு வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது.

இதன் காரணமாக பகல் நேரங்களில், மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது.

நேற்று தமிழகத்தின் 14 இடங்களில் வெயியில் 100 டிகிரியை தாண்டி பதிவாகியுள்ளது.

ஈரோட்டில் 107 புள்ளி ஆறு டிகிரியும், திருப்பத்தூர் மற்றும் தருமபுரியில் 106 டிகிரியும், வேலூர் மற்றும் திருத்தணியில் 105 டிகிரியும், கரூர், சேலத்தில் 104 டிகிரியும் வெப்பம் பதிவாகியுள்ளது.

>>>><<<<

தமிழகத்திற்கு தேவையான நிதியை வழங்குமாறு, மத்திய அரசிடம் மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்று சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மணல் குவாரிகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி, மாவட்ட ஆட்சியர்களை அழைத்து அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது சரியான நடவடிக்கை அல்ல என்றும் தெரிவித்தார்.

>>>><<<<

ஈரான் கடல் எல்லைக்குள் நுழைந்ததாக பிடித்து வைக்கப்பட்டுள்ள, போர்ச்சுக்கல் நாட்டு சரக்கு கப்பலில் பணிபுரியும் இந்திய சிப்பந்திகளை மனிதாபிமான ரீதியில் விடுவிக்க ஈரான் முன்வந்தள்ளது.

>>>><<<<

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் போராட்டம் நடத்தி வரும் மாணவர்கள், தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

>>>><<<<

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு கடத்தி வரப்பட்ட 600 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை குஜராத் மாநிலம், போர்பந்தர் அருகே படகு ஒன்றிலிருந்து இந்திய கடலோர காவல்படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>><<<<

ஜம்மு காஷ்மீரில் **Udhampur** மாவட்டத்தில் நேற்று தீவிரவாதிகளுக்கும், உள்ளூர் பாதுகாப்பு படையினருக்கும் நடைபெற்ற மோதலில் காவலர் ஒருவர் உயிரிழந்தார்.

>>>><<<<

பாவேந்தர் பாரதிதாசனின் 134வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

>>>><<<<

தேனியில் வாக்கு எண்ணிக்கை மையம் அமைக்கப்பட்ட பகுதியிலிருந்து 2 கிலோமீட்டர் சுற்றளவுக்கு ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி கல்பாக்கத்தில் நேற்று நடைபெற்றது.

>>>><<<<

தென்காசியில் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட ஒரு டன் அளவிலான மாம்பழங்களை உணவு பாதுகாப்புத்துறையினர் பறிமுதல் செய்து, அழித்தனர்.

>>>><<<<

கோவை மாவட்டத்தில் உள்ள வெள்ளியங்கிரி மலையில் வழிபாட்டுக்காக சென்ற ஒருவர் நேற்று மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்தார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில், இந்தியா 5 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் உள்ளிட்ட 8 பதக்கங்களை இதுவரை வென்றுள்ளது.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆடவர் குழுப் பிரிவில் இந்தியாவின் **Dhiraj Bommadevara, Tarundeep Rai, Pravin Jadhav** ஆகியோர் நடப்பு ஒலிம்பிக் சாம்பியன்களான தென்கொரியாவைச் சேர்ந்த முன்னணி வீரர்களை தோற்கடித்து, இந்தியாவுக்கு ஐந்தாவது தங்கப்பதக்கத்தை பெற்றுத் தந்தனர்.

உலக கோப்பை இறுதிப் போட்டியில், வலுவான ஒரு நாட்டின் அணியை இந்திய ஆடவர் அணியினர் வென்றுள்ளது இதுவே முதல்முறையாகும்.

இதன் மூலம், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணியினர் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

>>>><<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 78 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 212 ரன் எடுத்தது.

கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் 54 பந்துகளில் 98 ரன் எடுத்தார்.

213 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 18 புள்ளி ஐந்து ஓவரில் 134 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

சென்னை அணியின் சார்பில் துஷார் தேஷ்பாண்டே 4 விக்கெட்டுகளையும், முஸ்தாஃபிர் ரஹ்மான் மற்றும் மத்திஸா பத்திரானா தலா 2 விக்கெட்டுகளையும், ரவீந்திர ஜடேஜா மற்றும் ஷர்துல் தாக்கூர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக, அஹமதாபாதில் நடைபெற்ற போட்டியில் பெங்களூரு அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

இன்று கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<<